www.kalvisolai.com

J - 2012

1451(N)

பதிவு எண் | | | | | |

# தமிழ் - முதல் தாள்
# Language – Part A – TAMIL – Paper I
( செய்யுள், உரைநடை )

**( NEW SYLLABUS )**

நேரம் : 2 $\frac{1}{2}$ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

*அறிவுரை* : அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

*குறிப்பு* : i) இவ்வினாத்தாள் ஐந்து பிரிவுகளைக் கொண்டது.

ii) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.

## பிரிவு - I
( மதிப்பெண்கள் : 20 )

### பகுதி - 1

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : 6 × 1 = 6

1. கைதான் நெகிழவிடேன். இதில் நெகிழ என்பது .................... என்னும் பொருளில் வந்துள்ளது.

அ) தலர

ஆ) தளர

இ) தழர.

2. கண்ணகியின் காற்சிலம்பில் உள்ள பரல்கள்

அ) முத்து

ஆ) பவளம்

இ) மாணிக்கம்.

[ திருப்புக

www.kalvisolai.com



3. நல் என்னும் அடைமொழி பெற்ற நூல்

அ) அகநானூறு

ஆ) நற்றிணை

இ) கலித்தொகை.

4. பண்ணொடு தமிழொப்பாய் - எனத் தொடங்கும் பாடல் இடம் பெறும் நூல்

அ) திருவாசகம்

ஆ) திருக்குறள்

இ) தேவாரம்.

5. உலகம் என்ற தமிழ்ச்சொல் .................... என்ற சொல்லின் அடியாகப் பிறந்தது.

அ) உலகு

ஆ) உலவு

இ) உளது.

6. பெண் அடிமை ஆனதற்கு உரிய காரணங்களுள் ஒன்று .................... இல்லாமை.

அ) வாக்குரிமை

ஆ) பேச்சுரிமை

இ) சொத்துரிமை.

## பகுதி - 2

கோடிட்ட இடத்தை நிரப்புக : 6 × 1 = 6

7. சேக்கிழார் பெருமானார் அருளியது .................... .

8. போலிப் புலவர்களைத் தலையில் குட்டுபவர் .................... .

9. அறனீனும் இன்பமும் ஈனும் .................... தீதின்றி வந்த பொருள்.

10. 'உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்' எனத் தொடங்கும் பாடல் இடம்பெற்ற நூல் .................... .

11. நாள்தோறும் கல்வியில் .................... உண்டாகிக் கொண்டிருக்கின்றன.

12. படப்பிடிப்புக் கருவியை .................... பொருத்துவதும் உண்டு.

www.kalvisolai.com



## பகுதி - 3

பொருத்துக : 4 × 1 = 4

13. உழுவை — துன்பம்
14. செறிவு — ஒய்வெடுத்தல்
15. இடர் — புலி
16. இளைப்பாறுதல் — கூறியது மறாஅமை.

## பகுதி - 4

விடைக்கேற்ற வினா அமைக்க : 4 × 1 = 4

17. நமக்குக் கிடைத்த இலக்கண நூல்களுள் மிகப் பழமையானது தொல்காப்பியம்.
18. ஆசிரியர் என்பவர் அறிவுக்கடலாக மட்டுமின்றி அறத்தின் ஆழியாகவும் விளங்க வேண்டும்.
19. இலக்கியக் கூறுகள் என்பவை மருந்தின் மேலிட்ட இனிப்புப் போன்றவை.
20. திருக்குறளை மொழிபெயர்த்த உருசிய அறிஞர் தால்சுதாய்.

## பிரிவு - II

( மதிப்பெண்கள் : 20 )

## பகுதி - 1

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க : 5 × 2 = 10

21. கையுறைப் பொருள்களாக் குகன் கொண்டு சென்றன எவை ? யாருக்கு ?
22. வயலின் வரப்புகளாகக் கூறப்படுபவை யாவை ?
23. ஊக்கமுடையான் ஒடுக்கம் எதைப் போன்றது ?
24. பழியிலா மன்னனாய் வாழ்பவனின் பண்புகளாகக் கணிமேதாவியார் குறிப்பிடுபவை யாவை ?

[ திருப்புக

www.kalvisolai.com



25. பண்பு எனப்படுவது யாது ?

26. புறநானூறு குறிப்பு எழுதுக.

27. சிவபெருமான் எத்தன்மையான் ?

## பகுதி - 2

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தனுக்கு** மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க : 5 × 2 = 10

28. கல்விப்படங்களின் வாயிலாக நாம் அறிவன யாவை ?

29. தொல்காப்பியம் குறித்து டாக்டர் எமினோ கூறுவது யாது ?

30. நோய் வருவதற்கான காரணம் பற்றித் திருவள்ளுவர் கூறுவது என்ன ?

31. கொடுங்கடலால் கொள்ளப்பட்ட தமிழகப் பகுதிகள் யாவை ?

32. இந்தியாவின் வாழ்வு குறித்து காந்தியடிகள் கூறுவது யாது ?

33. சத்திய தரும சாலையில் வள்ளலார் செய்த தொண்டு யாது ?

34. தற்போது வளர்ந்து வரும் இரண்டு தொழில்நுட்பத் துறைகள் யாவை ?

## பிரிவு - III

( மதிப்பெண்கள் : 24 )

## பகுதி - 1

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க : 3 × 4 = 12

35. தமிழர் எதற்கு நாண வேண்டும் ?

36. சீதை, இலக்குவன் ஆகியோரிடம் குகனைப் பற்றி இராமன் கூறியது என்ன ?

37. தலைவனுக்குத் தோழி கூறும் செய்தியினை நற்றிணைப் பாடல் வழித் தொகுத்து எழுதுக.

38. சீறாப்புராணம் - குறிப்பு எழுதுக.

39. சாதனைப் பூக்கள் என்று எவற்றைச் சாலையார் சுட்டுகிறார் ?

www.kalvisolai.com



## பகுதி - 2

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க : 3 × 4 = 12

40. பெண்கல்வி குறித்துப் பெரியார் கூறும் கருத்துக்கள் யாவை ?

41. மேடைப் பேச்சின் திறம் குறித்துக் குறள் கூறும் செய்திகள் யாவை ?

42. கடல் வாணிகம் குறித்து எழுதுக.

43. காந்தியடிகளைக் கவர்ந்த நாடகம் எது ?

44. கல்வி வளர்ச்சிக்கு அம்பேத்கார் ஆற்றிய பணி யாது ?

## பிரிவு - IV

( மதிப்பெண்கள் : 10 )

45. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க : 5

அரியா சனமுனக்கே யானால் உனக்குச்

சரியாரும் உண்டோ தமிழே - விரிவார்

திகழ்பா ஒருநான்குஞ் செய்யுள்வரம் பாகப்

புகழ்பா வினங்கள்மடைப் போக்கா - நிகழவே

i) இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது ?

ii) இப்பாடலில் உனக்கு என்பது எதைக் குறிக்கிறது ?

iii) நான்கு வகைப் பாக்கள் எவை ?

iv) இப்பாடலில் பயின்று வந்துள்ள அடியெதுகைகளை எடுத்தெழுதுக.

v) அரியாசனம் - பொருள் தருக.

www.kalvisolai.com



46. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க : 5

தமிழினம் தனக்குவமையில்லா ஒரு தனி இனம். தமிழர் நாகரீகம் தன்னிகரில்லா தனி நாகரீகம். தமிழர் உணவு, உடை, விருந்து, ஈகை, பொறை, நடுவுநிலைமை, அருள் ஆகிய பண்புகளால் சிறந்திருந்தனர். உழவையும், தொழிலையும் மதித்திருந்தனர். வினையை ஆடவர் உயிராகக் கருதினர்; சான்றோனாதலே கல்வியின் முடிவெனப் போற்றினர்; விருந்தெதிர் கொண்டு வாழ்ந்தனர்; புகழெனில் உயிரும் கொடுக்க முனைந்தனர், பழியெனில் உலகைப் பெறவும் மறுத்தனர்; ஈந்து உவந்து இன்பம் கண்டனர். இத்தகைய நாகரீகமும் பண்பாடும் மிக்கவராகத் தமிழர் வாழ்ந்தனர்.

i) தமிழர்களின் நாகரீகம் எத்தகையது ?

ii) தமிழர்களின் சிறந்த பண்புகள் எவை ?

iii) கல்வியின் முடிவு எது ?

iv) புகழ், பழி குறித்து இப்பத்தியில் கூறப்படுவன யாவை ?

v) இவ்வுரைப் பகுதிக்குப் பொருத்தமான தலைப்புத் தருக.

www.kalvisolai.com



## பிரிவு - V

( மதிப்பெண்கள் : 26)

### பகுதி - 1

கீழ்க்காணும் வினாக்களுக்குப் பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க : 2 × 8 = 16

47. அ) அப்பூதி அடிகளார் இல்லத்தில் நிகழ்ந்ததை விவரிக்க.

*அல்லது*

ஆ) பொருளினது சிறப்பு, பொருளீட்டும் நெறி, பொருளீட்டுவதால் ஏற்படும் பயன்கள் குறித்து திருவள்ளுவர் கூறும் கருத்துக்கள் யாவை ?

48. அ) மேடைப்பேச்சின் கூறுகளை விளக்குக.

*அல்லது*

ஆ) தொழிற்கல்வி, தொழில்நுட்பக் கல்வி குறித்து விரிவாக எழுதுக.

### பகுதி - 2

49. செய்யுள் வடிவில் விடை தருக : 2 + 2 + 6 = 10

அ) காலம் - எனத் தொடங்கும் குறள்

ஆ) உயர்வு - என முடியும் குறள்

இ) ஏசாச் சிறப்பின் ......... எனத் தொடங்கி .......... கோவலன் மனைவி என முடியும் சிலப்பதிகாரப் பாடலடிகள்.